சார்பு நீதிமன்றம், திருவாரூர்.

முன்னிலை திரு. M. முருகன், M.L.,

சார்பு நீதிபதி, திருவாரூர்.

<u>அசல் வழக்கு எண்.88/2021</u>

27.03.2026

வா.சா.1 திருமதி. அபிராமி, க/பெ. பாபு

**4 ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

4 ம் பிரதிவாதி காமாட்சிக்கு வாதிகளாகிய எங்களுக்கும் எந்த தொடர்பும் இல்லை என்றால் சரிதான். எனவே தாவா ஒப்பந்தத்தை பொறுத்தவரை 4 ம் பிரதிவாதி 3 ம் நபர் என்றால் சரிதான். ஒப்பந்தம் எற்பட்டதாக சொல்லும் தேதியிலேயே தாவா சொத்தின் காமாட்சிக்கும் பங்கு உள்ளது என்றால் சரிதான். வா.சா. ஆ.3 கிரய ஒப்பந்த பத்திரத்தில் காமாட்சியின் பாகத்தை பொறுத்து ஏதும் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். அந்த ஒப்பந்தத்தில் காமாட்சியின் பாகம் மறைக்கப்பட்டு ஒப்பந்தத்தை எழுதி கொடுத்தவர்களுக்கு மட்டும் உரிமை உள்ளது போல் காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். காமாட்சி தாவா சொத்தில் அவருக்கு உள்ள விகிதத்தில் எனக்கு விற்பனை செய்யவில்லை என்றால் சரிதான். எனவே 4 ம் பிரதிவாதிக்கு எதிராக அசல் வழக்கு நிலைக்க தக்கது அல்ல என்றால் சரியல்ல. நான் 4 ம் பிரதிவாதிக்கு எதிராக பாகம் கேட்டு மட்டுமே வழக்கு தாக்கல் செய்ய இயலும் என்றாலும் ஏற்றதை ஆற்றுதல் பரிகாரம் கேட்டக இயலாது என்றால் சரியல்ல. நான் கிரய ஒப்பந்த படி பாக்கி கிரய தொகை வைப்பீடு செய்யததாலும் அதை பொறுத்து பிராதில் தெரிவிக்காததாலும் தாக்கல் செய்துள்ள பிராது சட்ட பிழையுடையது என்றாலும் சரியல்ல.

Typed down to my dictation, In my presence and hearing and under my personnel direction and Superintendence and admitted by the witness to be Correct.

Sd/ M. Murugan
Subordinate Judge,
Tiruvarur.